திரு. டி. கார்ச்சா கவுடர் : பெருவாரியான நகரப் பஞ்சாயத்துக்களில் வசூலிக்கும் வரிப்பணம் அங்கேயே எஸ்டாப்ளிஷ்மெண்ட் சார்ஜ்ஜுக்கே பெரும்பகுதி சரியாய்ப் போய்விடுகின்றது. அதனால் அபிவிருத்தி வேலைக்குப் பணம் போதவில்லை. அபிவிருத்தி வேலை தடைப்படுகிறது. ஆகவே, எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் உள்ள டவுன் பஞ்சாயத்தை ஆர்டினரி பஞ்சாயத்தாக ஆக்கவும் இந்த அதிகாரி யோசனை கூறலாம் என்று சர்க்கார் சொல்லியிருக்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மக்கள் தொகையையும் வருமானத்தையும் அடிப்படையாகக் கொண்டு தான் நகரப் பஞ்சாயத்துக்கள், சட்டப்படி அமைக்கப்படுகின்றன. நகரப் பஞ்சாயத்துக்களை கிராமப் பஞ்சாயத்தாகத் தாழ்த்துவதற்கு இப்போது உத்தேசம் இல்லை. வரிவிதிப்பு அம்சங்களைக் கூடுமானவரை குறைத்து விதிப்பதால் இந்த நிலைமை ஏற்படுகிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

திரு. வை. சங்கரன் : பொருளாதார நிலை சரியாக உள்ள குறிப்பிட்ட நகராட்சி அல்லது பஞ்சாயத்துக்கள் பற்றி அவர் பார்வைக்குக் கொண்டுவரப்படுமா ? அல்லது பொதுவாக எல்லாவற்றையுமே எடுத்துப் பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எல்லாவற்றையுமே பரிசீலித்து தம் அபிப்பிராயத்தைச் சர்க்காருக்குத் தெரிவிப்பார்.

திரு. அ. ரா. இராமசாமி : பரிசீலனை அவரது யுக்தானுசாரத்தின் பேரில் நடைபெறுமா ? அல்லது முறையாக எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெறுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வேறு விவரம் என்னிடம் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஸ்தல ஸ்தாபனங்களின் பொருளாதார நிலையைப் பரிசீலனை செய்ய அமைத்திருக்கிற ஸ்பெஷல் ஆபீசர்----ரோடுகளுக்கு ஜனவிகிதாசாரப்படி கொடுக்கிற மானியத்தை---ரோடுகளின் தூரம் அடிப்படையில் கொடுக்க ஏதாவது பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சம்பந்தப்பட்ட டிமாண்டில் பேச வேண்டிய விஷயம் இது. அல்லது தனிக்கேள்வி போடவேண்டும்.

New Municipalities

* 194 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the names of new Municipalities still continuing under the charge of Special Officers; and

(*b*) whether there is any proposal to hold elections for these Municipalities and if so when ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ)·(1) ஆலந்தூர்; (2) அல்லி நகரம்; (3) தர்மபுரி; (4) பரமக்குடி; (5) கோவில்பட்டி; (6) சங்கரன்கோயில் ; (7) தாம்பரம் ; (8) சிவகங்கை ; (9) பட்டுக்

7th March 1966]

கோட்டை. (10) கிருஷ்ணகிரி; (11) புளியங்குடி; (12) ஆத்தூர்; (13) சிங்காநல்லூர்; (14) திருச்செங்கோடு; (15) தென்காசி; (16) இடைப்பாடி முதலிய நகராட்சிகள்.

(இ) ஆம். வார்டுகளைப் பிரித்தல்; வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைத்தல் போன்ற தேர்தல் முன்னேடி வேலைகள் இப்போது பல நிலைகளில் நிறைவேறி வருகின்றன. இவை முடிவுற்றதும், இவற்றிற்குத் தேர்தல்கள் நடத்தப்படும்.

திரு. து. ப. அழகமுத்து : இந்த நகராட்சிகள் தனி நபர் பொறுப்பில் வந்து எத்தனை நாட்களாகின்றன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இரண்டு பேஸ்டு (Phared) ப்ரோக்கிராமாக எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆலந்தூர், அல்லி நகரம், தர்மபுரி, பரமக்குடி, கோவில்பட்டி, சங்கரன்கோயில், தாம்பரம் ஆகிய 7 முனிசிபாலிடிகளும் 1—4—1964 முதல் எடுத்துக் கொள்ளப்பட்டன. சிவகங்கை, பட்டுக்கோட்டை, கிருஷ்ணகிரி போன்ற பாக்கி ஒன்பதும் 1—4—1965 முதல் எடுத்துக்கொள்ளப் பட்டன.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த நகராட்சி மன்றங்களின் தேர்தல்கள் பொதுத்தேர்தலுக்கு முன்பு நடத்தப்படுமா ? பின்பு நடத்தப் படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நான் முன்பு கூறியபடி வார்டுகளைப் பிரித்தல், வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைத்தல், போன்ற தேர்தல் முன்னேடி வேலைகள் பூர்த்தியானவுடன் நடைபெறும்.

திரு. ஜே. மாதா கவுடர் : பொதுத் தேர்தலுக்கு முன்பு இந்த வேலைகள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டன என்றாலும் இந்தத் தேர்தலைப் பொதுத் தேர்தலுக்கு முன்பு நடத்துவது சரியா ? பொதுத் தேர்தல் நடந்த பிறகு நடத்தக் கூடாதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சர்க்கார் எல்லாவற்றையும் யோசித்துத்தான் முடிவு செய்யும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : புதிதாக ஸ்தாபிக்கப்பட இருக்கும் நகர சபைகள் எந்த அடிப்படையில் ஸ்தாபிக்கப்படுகின்றன ? ஜனத்தொகை எவ்வளவு இருக்கவேண்டும் ? வருமான வரம்பு எவ்வளவு இருக்கவேண்டும் ? இந்த வரம்புகளுக்கு உட்பட்டு இந்த ராஜ்யத்தில் எவ்வளவு முனிசிபாலிடிகள் இருக்கின்றன ? எல்லாவற்றிலும் நகரசபையைத் தோற்றுவிக்க உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இருபது இருபத்தையாயிரம் ஜனத்தொகை இருக்கவேண்டும். வருமான வரம்பு ஒரு லட்சத்திற்கு மேற்பட்டது, எவை எவை நகரசபையாக மாற்றப்பட வேண்டும் என்பது பற்றி பஞ்சாயத்து போர்டுகள், யூனியன்கள் அபிப்பிராயம் சொல்லவேண்டும்.

[7th March 1966

திரு. நா. இராசாங்கம் : தென்னாற்காடு ஜில்லாவில் பெண்ணாடம், பண்ணுருட்டி நெல்லிக்குப்பம் போன்றவைகளும் நகரசபைகளாக மாற்றப்படவேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. அவை இந்தப் பட்டியலில் இடம் பெறாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட முனிசிபாலிடிகளைப் பற்றித்தான் மூலக் கேள்வி கேட்கப்பட்டது. ஆனால் இவை எல்லாம் பரிசிலனையில் இருக்கின்றன.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஜனத்தொகையிலும் சரி, வருமானத்திலும் சரி, நகரசபையாக இயங்குவதற்குரிய வரம்பைத் தாண்டியுள்ள நகர பஞ்சாயத்துகளின் லிஸ்டைத் தயாரித்து அந்த அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு அனுப்பி அபிப்பிராயம் கேட்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. **மஜீத்** சர்க்காரே எல்லாவற்றையும் நகரசபையாக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதில்லை. ஏழை ஜனங்கள், அதிக வரி கட்டுவதற்கு வருமானம் இல்லாத இடங்களும் இருக்கக்கூடும். ஆகவே, அந்த, அந்த பஞ்சாயத்துக்களே சிபாரிசு செய்தால் அது பரிசிலனை செய்யப்படும்.

சிறு சேமிப்புத் திட்டம்

*195 கேள்வி.—திரு ஜே. மாதா கவுடர் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-ல் நவம்பர் மாதம் முடிய சிறு சேமிப்புத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை சேர்ந்திருக்கிறது ?

(இ) திட்டத்தைத் தீவிரப்படுத்த என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 10·77 crores.

(*b*) Due to the conduct of Savings fortnight and special campaigns all over the State in different periods from July to November, 1965 the total collection for the State has already exceeded the target of Rs. 10 crores for the year 1965–66. Besides the conduct of Savings fortnight and special campaign, other measures of publicity have also been undertaken for popularising the Small Savings Schemes. The Government have recently sanctioned a scheme to intensify collections under Cumulative Time Deposit Schemes. This scheme is to pay a saving allowance of 50 pase per annum for every Rs. 5 account and multiple thereof to the Village Officers through whose efforts the Cumulative Time Deposit accounts are opened and maintained. Special Revenue Inspectors have also been sanctioned for each group of Rs. 20,000 account in one municipal area or a group of municipal areas for effective follow-up work.